**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

<table>
<tr><td>Calender<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions<br>Deposition of Witness for<br>Name<br>Father's/Husband's Name<br><br>Nationality</td><td>:<br>:<br>: CC 796/2019<br>:<br>: PW-5<br>: மகேஷ்<br>: தட்சிணாமூர்த்தி<br><br>: Indian</td><td>Village:<br>Age :<br>Taluk :<br><br>Religion :</td></tr>
</table>

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of**

**03/06/2022**

சாட்சியை திருவிடைமருதூர் முதன்மை காவலர் திருமதி .கௌசல்யா தேவி என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**முதல் விசாரணை**:

நான் தற்போது திருவிடைமருதூர் தாலுக்கா வண்ணக்குடி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது சிவில் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். ( **பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) கடந்த 2 அல்லது 3 வருடங்களுக்கு முன்பாக ஒருநாள் 1ம் எதிரி மாரிமுத்து வீட்டிற்கு எதிரே சாப்பிடுவதற்காக சென்று கொண்டிருந்தபோது, திருவிடைமருதூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் அங்கு வந்து என்னிடம் மாரிமுத்துவின் முகவரியை கேட்டார். நான் முகவரி கூறினேன்.

அதற்காக என்னிடம் கையொப்பம் பெற்று கொண்டார். போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கேட்டு கொண்டதற்கு இணங்க சாட்சி பிறழ் சாட்சியாக ஆக்கப்பட்டு அரசு தரப்பு குறுக்கு விசாரணை**.

கடந்த 03/10/2014 அன்று காலை 11.45 மணியளவில் திருவிடைமருதூர் காவல் நிலைய போலிசார் சம்பவ இடமான பிள்ளையார்கோவில் தெரு ரவிச்சந்திரன் என்பவரது வீட்டின் அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்ததில், நானும், ஜெயராமன் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்துவிட்டு தற்போது எதிரிகள் என்னை கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டி அரசு தரப்பு வழக்கில் இருந்து விலகி பிறழ் சாட்சியாக மாறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

குறுக்கு விசாரணை இல்லை

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**